(ஆ) ஒற்றிவைப்புத் தீர்மானம் மீதான முடிவு குறித்து

Dr. H. V. HANDE: On a point of order, Sir; there are a large number of cycle-rickshaws outside about which I have given an adjournment motion. May I know what is the disdisposal.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று முதலிலே சொல்லுங்கள். அதற்குப் பிறகு செய்திக்குப் போகலாம். அட்ஜர்ன்மென்ட் மோஷன் கொடுத்ததாகச் சொன்னீர்கள். இதுவரை என்னிடம் ஒன்றும் வரவில்லை. அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வராததற்குப் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது கூடாது. இதற்கு விளக்கம் கொடுக்கும் முறை கிடையாது.

Dr. H. V. HANDE: This is an emergency. Will you take it has not yet reached you, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காலை எட்டரை மணிக்கு வந்து என்னுடைய அறையில் உட்காருகிறேன். ஒன்பது மணி வரையில் அறையிலேயே தானிருந்தேன். உங்களுடைய அட்ஜர்ன் மென்ட் மோஷன் அதுவரை வரவில்லை.

Dr H. V. HANDE: I have given it to the Secretary but up the matter with the Secretary as to why it has not yet been given to you?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வேறு விஷயம்.

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு அவை முதல்வர் அவர்கள் விதி 41 (3) ஐ தளர்த்த வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 41 (3)-ன் கீழ் ஒரு கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக் கூடாது என்கிற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. கரு. சிமைச்சாமி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள். அவர்கள் சபைக்கு வரவில்லை. அடுத்து, புலவர் பொ. பொன்னம்பலம் அவர்கள் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

(அ) திருமயம் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மழையின்மையும் வரித் தள்ளுபடியும், கடன் வசூல் ஒற்றி வைப்பும்.

புலவர் பொ. பொன்னம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே. "திருமயம் தொகுதியில் அமைந்த பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுவதும், திருமயம் ஊராட்சி ஒன்றிய பகுதியில் விருவயல், வீரனுவயல், கோயிலாம்வயல், கணக்கன்வயல், அரு
மந்தாவயல் பிரிவுகளும் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்
மு.ப. 10-00 பட்டுள்ளதால் வரியைத் தள்ளுபடி செய்யவும், கடன் தொகைப் பங்கைக் கட்டாயப்படுத்தாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியது பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வறட்சி நிலைமை மிகக் கடுமையாக இருந்தபோது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வறட்சியால் பீடிக்கப்பட்ட வட்டங்களில் திருமயம் வட்டமும் ஒன்றென 1969 ஏப்ரலில் அறிவிக்கப்பட்டது. வறண்ட பகுதிகளில் நிலவரி நிலுவைகள், அரசுக்கடன் தவணைகள் முதலியவற்றை வசூலிப்பதைத் தள்ளிப் போடுதல் உட்பட துயர் துடைப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக மேற்கொண்டார். அரசு நிலுவைகளைப் 'பைய' வசூலிக்கும் பொதுவான கொள்கை 1970-ஆம் ஆண்டில் தொடக்கப் பகுதி வரையில் பின்பற்றப்பட்டு வந்தது.

பெரும்பாலும் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் பருவ நிலைமை மேம்பாடடைந்து, அக்டோபர், டிசம்பர் திங்களில் நல்ல மழை பெய்ததால் தள்ளிப் போடப்பட்ட நிலுவைகள் வசூலிப்புச் சலுகையை நிறுத்த வேண்டுமென்று வருவாய்த்துறை வாரியம் அரசிற்குப் பரிந்துரைத்தது. இது குறித்துத் திருத்த ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. மாநிலத்தின் தற்போதைய நிதி நிலையை விழிப்புடன் ஆராய்ந்த பின்னர், வறட்சியின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, அரசு நிலுவைகள் அனைத்தையும் வசூலிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு 1970 ஜனவரி இரண்டாம் வாரத்தில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

எனினும், உண்மையும் இடர்ப்பாடும் உள்ள நேர்வுகளில் அரசு நிலுவைகள் வசூலிக்கப்படுவதை ஒத்திப்போட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் விரும்பினால், அவ்வாறு அவர் செய்வதை இவ்வாணைகள் தடுக்கா. வாரிய நிலை ஆணைகளுக்கிணங்க, பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரித் தள்ளுபடி வழங்குவது குறித்து, வருவாய்த்துறை அதிகாரிகள் உறுதியாக ஆய்வு செய்வர்.